திருவாடானை தாலூகாவிற்கு குடிதண்ணீர் வசதி

* 234 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை தாலூகாவில் குடி தண்ணீர் வசதி போதுமான அளவில் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதைப் போக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) உண்மையல்ல.

(இ) நிறைவேற்றப்படுகின்ற பல்வேறு திட்டங்களில், போதுமான குடிநீர் வசதியளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: ஸார், திருவாடானை தாலூகாவில் கடுமையான அளவுக்கு குடிதண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பத்து மைல்களுக்கு அப்பால் சென்று ஜனங்கள் குடிதண்ணீர் எடுப்பதற்காக போகிறார்கள். மழை காலத்தில் ஏரிகளிலிருந்து சாப்பிடுவதற்கு தண்ணீரை உபயோகிக்கிறார்கள். கழிந்த ஆறு மாத காலமாக எந்தவிதமான மழையும் அங்கு இல்லை. ஆகவே இதில் அரசாங்கம் நேரடியாக கவனம் செலுத்தி இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்கு வழிவகை செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில் பஞ்சாயத்து யூனியன் மூலமாக குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 2 லட்சம் ரூபாய் முதல் 4 லட்சம் ரூபாய் வரை செலவு செய்வது என்று இருக்கிறது. பிரத்தியேகமாக இதைப்பற்றி சர்க்கார் கவனிக்க வேண்டுமென்றால் அபிவிருத்தி மன்றத்தின் மூலமாக அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பலாம்; அரசாங்கத்திற்கும் தனியாக எழுதி அனுப்பலாம்.

திரு. சா. கணேசன்: திருவாடானை வட்டம் பல வழிகளிலும் தண்ணீர் பற்றுக்குறையாக இருக்கின்ற பகுதியாக இருக்கின்றது. அங்கு எந்தவிதமான ஆற்றுநீரும் இல்லை. மிகவும் கரிசலான பகுதி. அந்த இடத்தில் பஞ்சாயத்தால் மட்டும் இந்த விதமான கஷ்டங்களை நிவர்த்தி செய்துவிட முடியாது. ஆகவே அரசாங்கம் கவனம் செலுத்தி அங்கு பெரிய ஊற்றுகளை தோண்டியோ அல்லது பெரிய கிணறுகளை தோண்டி அவை மூலமோ தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏரித் தண்ணீரைக் குடிப்பது, வேறு தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் தான். இதன் காரணமாக பல நோய்களும் ஏற்படுகின்றன என்பதை அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். ஆகவே இதை அரசாங்க நிலையில் தீர்த்து வைக்க ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: திருவாடானை சம்பந்தப்பட்ட வரையில், அந்த இடம் மிகவும் பிற்பட்ட இடமாக இருந்து, தண்ணீர் வசதி இல்லையென்றால், அதைப்பற்றி கலெக்டர் அவர்கள் மூலமாக ஸ்பெஷல் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கிம் டிவிஷன் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு எழுதலாம். இதைத் தவிர சர்க்காருக்கு எழுதினால் அதைப்பற்றி சர்க்காரும் பரிசிலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓலக்கூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலக இடமாற்றம்

*235 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்திலுள்ள ஓலக்கூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் ஓலக்கூரிலிருந்து திண்டிவனத்துக்கு மாற்றப்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம். இந்த அலுவலகம் ஓலக்கூரிலிருந்து திண்டிவனத்திற்குத் தற்காலிகமாகவே மாற்றப்பட்டுள்ளது.

(இ) ஓலக்கூர் வளர்ச்சி வட்டாரத்தின் தலைமையிடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சாரம் கிராமத்திலே வாடகைக்குத் தகுந்த இடம் கிடைக்கவில்லை. எனவே, சாரம் கிராமத்தில் அலுவலகக் கட்டிடமும் பணியாளர் குடியிருப்புகளும் கட்டி முடிக்கும் வரையில் அலுவலகம் திண்டிவனத்திற்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

UNSTARRED QUESTIONS.

Khandasari Units in the State.

9 *Q.*—Sri C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) the number of Khandasari Units working in the State; and

(*b*) the number of Khandasari Sugar Factories proposed to be opened in the State during 1964–65?

A.—(*a*) The following three Khandasari Units are working in the State:—

(1) Annapoorna Sugars Limited, Thenkarai, Coimbatore taluk; Coimbatore district.

(2) Narayana Sugars (Factory at Idigarai) Coimbatore, taluk, Coimbatore district.

(3) Thirumagal Sugar Factory, Krishnagiri, Salem district.

(*b*) Government do not have information as any person can start these units without any permit.